DINAMALAR

20 MAR 2022

PAGE 9

# சமுதாயக் கல்லூரியில் தேசிய பயிற்சிப் பட்டறை




புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியில் தேசிய பயிற்சிப் பட்டறை நடந்தது.

**புதுச்சேரி, மார்ச் 20–**

தேசிய பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற கல்லூரி மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியில் மகளிர் மனநலம் என்ற தலைப்பில் மூன்று நாள் தேசிய பயிற்சிப் பட்டறை நடந்தது. கல்லூரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் துவக்கி வைத்தார். இந்திய கையுந்து பந்து வீராங்கனை நர்மதா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

பயிற்சி முகாமில் பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த மாணவிகள் பங்கேற்றனர். அவர்களுக்கு பெண்கள் எதிர்நோக்கும் உளவியல், உடல் பிரச்னைகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

நிறைவு விழாவில் ராஜிவ்காந்தி தேசிய இளைஞர் முன்னேற்றத் துறை இயக்குனர் ஷிப் நாத் தேப், பல்கலைக்கழக விளையாட்டு துறை இயக்குனர் வசந்தி கலந்து கொண்டனர்.

பயிற்சி பட்டறையில் பங்கேற்ற கல்லூரி மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் ஜெகதீஸ்வரி, சமுதாய கல்லூரி ஆசிரியர்கள் செய்திருந்தனர்.

THE NEW INDIAN EXPRESS

20 MAR 2022

PAGE 3



# French govt's award for PU professor

**EXPRESS NEWS SERVICE**
@ Puducherry

SENIOR Professor at Pondicherry Central University Prof Dr Nalini J Thampi was awarded the *Chevalier dans l'Ordre des Palmes Académiques de la République française* (Chevalier of the Order of 'Academic Palms' ) by the Republic of France, in recognition of her commitment towards the promotion and dissemination of the French language, and her outstanding contribution to Franco-Indian academic cooperation and the promotion of women's rights.

Consul General of France in Puducherry Lise Talbot Barré presented the award to Dr Nalini J Thampi at a function held in the Consulate on Saturday.



Lise Tabolt Barre, Consul General of France in Pondicherry presenting the award on Saturday | PATTABI RAMAN

The original 'Palmes Académiques' was instituted by Napoleon on 17 March 1808 to decorate people associated with Higher Education and reputed Universities and is a Title of Honour. The honorary distinction recognises Dr Nalini Thampi's exemplary career, determined and continuous commitment to the service of French Literature, Francophone Studies, French language, Civilisation, Women's Studies and Academics.

Dr Nalini J Thampi has produced 15 doctoral candidates, more than 200 master's projects and M Phil dissertations. She has worked as the Head of the Department of French, Head Women's Studies, Head - Centre for Foreign Languages, Dean - School of Humanities and Vice-Chancellor ( Acting) at Pondicherry Central University.

DINAMALAR

20 MAR 2022

PAGE 9

## புதுச்சேரி

# புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் ஆய்வு கட்டுரை நூல் வெளியீடு

புதுச்சேரி, மார்ச் 20–

ஒடிசா நாட்டுப்புற கவிஞர் ஹல்தர் நாக்கின் இலக்கிய படைப்புகள் குறித்த ஆய்வு கட்டுரை நூல் வெளியிடப்பட்டது.

ஒடிசாவின் பர்கட் மாவட்டத்தில் பிறந்தவர் கவிஞர் ஹல்தர் நாக். அவரின் நாட்டுப்புற இலக்கிய சேவையை பாராட்டி கடந்த 2016ம் ஆண்டு மத்திய அரசு, 'பத்மஸ்ரீ' விருது வழங்கியது.

அவர், கோசலி மொழியில் இருபதுக்கும் மேற்பட்ட காப்பியங்களையும், கவிதைகளையும் இயற்றியுள்ளார்.

அவரது நாட்டுபுற இலக்கிய பணிகள் குறித்து புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் கடந்தாண்டு தேசிய கருத்தரங்கம் நடந்தது. இதில் சிறந்த 28 கட்டுரைகளை தொகுத்து நூல் வடிவில் கொண்டு வரப்பட்டுள்ளது.



ஒடிசா நாட்டுப்புற கவிஞர் ஹல்தர் நாக்கின் இலக்கிய படைப்புகள் குறித்த ஆய்வு கட்டுரை நூலினை புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் வெளியிட, இந்தி துறைத் தலைவர் ஜெயசங்கர் பாபு பெற்றுக் கொண்டார்.

இதனை புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் வெளியிட, இந்தி துறை தலைவர் ஜெயசங்கர் பாபு பெற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் மொழி பெயர்ப்பாளர் தினேஷ்குமார் மாலி உள்பட பலர் கலந்து கொண்டனர்.